# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



ஹிந்து தர்ம வித்யா பீட வெளியீடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

வெளியிடுவோர்:

**ஹிந்து தர்ம வித்யா பீடம்,**

ஸ்ரீ விவேகானந்த ஆசிரமம், வெள்ளிமலை,

கல்படி அஞ்சல், கன்யாகுமரி மாவட்டம்-629204

போன்: 04651 - 537411

இரண்டாம் பதிப்பு - 1000 பிரதிகள் - 2002

விலை ரூபாய் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**"ஆத்ம சாந்திப் பிரார்த்தனை"** என்ற சிறுநூலை வெளியிடுவதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஏனெனில், நமது நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் நம்மை விட்டுப் பிரிவது உலகில் சகஜம். பிறப்புண்டானால் இறப்புமுண்டு. அவ்வாறு நம்மைவிட்டுப் பிரிந்துபோன ஆன்மாவின் மறுவுலக வாழ்வு சாந்தியடைய உதவுவன அவர்களை நினைந்து நாம்செய்யும் பிரார்த்தனையும், பூஜைகளும் தாம் என நம் முன்னோர்களாகிய ரிஷிமார்கள் கண்டுள்ளனர். எனவேதான் இல்லறவாசி ஒருவன் ஆற்றியாகவேண்டிய பஞ்சமகா யஜ்ஞங்களில் பித்ரு யஜ்ஞமும் ஒன்றாகச் சேர்த்துள்ளனர். அதற்கு உதவியாக சுருங்கிய முறையில் இந்த நூல் வெளிவருகிறது. இதனை பக்தி சிரத்தையுடன் ஓதினால் நம்மை விட்டுப் பிரிந்த ஆன்மா சாந்தியடையும் என்பது நிச்சயம். **"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு"**

மேலும் உயிருடன் வாழும் நமக்கும் இத்தகைய பிரார்த்தனையினால் பெருஞ் சாந்தியுண்டாகும். அல்லாமல் **"ஆண்டுதோறும் அழுது புரள்"**வதால் மாண்டாரும் வரமாட்டார்கள், நமக்கும் பயனில்லை.

நேர்மாறாக திருவாசகம், ஸ்ரீமத் பகவத்கீதை ஆகிய மறைநூல்களிலுள்ள இம்மந்திரங்களை ஓதுவதால் நமது கவலையும், துன்பமும் நீங்கி மனத்தெளிவு ஏற்படுகிறது. தெளிவான மனத்தில் ஆத்மஞானம் வளரும். ஆன்ம ஞானத்தால் ஒருவன் நித்திய நிரந்தர பேரின்ப முத்திப் பேற்றை அடைகிறான். ஆதலால் இறந்துபோன ஆன்மாக்களுக்கும், இருப்பவர்களுக்கும் சாந்தியுண்டாக, சுருக்கமாக, உலகிலெங்கும் சாந்தி நிலவ, நாம் பிரார்த்திப்போமாக!

**இவண்,**

**வெள்ளிமலை** சுவாமி மதுரானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(மரணமடைந்தவரின் படத்தை வைத்து பூ வைத்து, அருகில் குத்துவிளக்கு ஏற்றி, ஊதுபத்தியும் கொளுத்தி வைக்கவும்)

**ஓம் கஜானனம் பூதகணாதி ஸேவிதம்**
**கபித்த ஜம்பு பலஸார பக்ஷிதம்**
**உமாஸுதம் சோக விநாச காரணம்**
**நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்**

**சங்கல்பம்**

இந்த குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்ற (திரு.........) அவர்களின் ஆத்மா சாந்தி அடையவும், இக்குடும்பத்தினர் மன ஆறுதல் பெற்று நல்வாழ்வு வாழவும் வேண்டி இந்தப்பிரார்த்தனை வழிபாட்டைச் செய்கிறோம். இறைவா இப்பிரார்த்தனை நிறைவேற அருள்புரிவாயாக.

**சிவ புராணம்**

**(எல்லோரும் சேர்ந்து சொல்லவும்)**

**ஓம் திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவனடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவரச் சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண் ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

(மூன்றுதடவை சொல்லவும்)

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தநாத்
ம்ருத்யோர், முக்ஷீய மாம்ருதாத்

## கீதை தியான ஸ்லோகம்

ஓம் பார்த்தாய ப்ரதிபோதிதாம் பகவதா
நாராயணேன ஸ்வயம்
வ்யாஸேன க்ரதிதாம் புராணமுனினா
மத்யே மகாபாரதம்
அத்வைதாம்ருத வர்ஷிணீம் பகவதீம்
அஷ்டாத சாத்யாயினீம்
அம்பத்வாமனு சந்ததாமி பகவத்
கீதே பவத்வேஷிணீம் 1

பகவான் நாராயணனாலேயே அர்ஜுனனுக்குப் போதிக்கப் பெற்றதும், புராண முனிவராகிய வியாசரால் மஹா பாரதத்தின் மத்தியில் தொகுக்கப் பெற்றதும், அத்வைதமாகிய அமுதத்தைப் பொழிவதும், பிறவிக் கடலில் உழல்வதைத் தவிர்ப்பதும், பதினெட்டு அத்யாய வடிவிலிருப்பவளுமான பகவதியே, பகவத்கீதை தாயே உன்னை நான் தியானிக்கிறேன்.

நமோஸ்துதே வியாஸ விசாலபுத்தே
புல்லார விந்தாயத பத்ரநேத்ர
யேனத்வயா பாரத தைல பூர்ண:
ப்ரஜ்வாலிதோ ஜ்ஞானமய: ப்ரதீப: 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலமான புத்தியுடையவரும் மலர்ந்த தாமரை இதழ் போன்ற கண்களை உடையவருமான வியாசரே! உமக்கு வணக்கம். பாரதம் என்னும் எண்ணெய் நிறைந்த ஞானமயமான விளக்கு உம்மாலல்லவா ஏற்றி வைக்கப் பட்டது.

**ப்ரபன்ன-பாரிஜாதாய தோத்ர வேத்ரைக-பாணயே**
**ஜ்ஞானமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருத துஹேநம:**

சரணடைந்தவர்களுக்குக் கற்பக மரமாகவும், ஒரு கையில் சாட்டை ஏந்தியவனாகவும், ஞானமுத்திரை காட்டுபவனாகவும், கீதை எனும் அமுதத்தைக் கறப்ப வனாகவும் விளங்கும் கிருஷ்ணனுக்கு வணக்கம்.

**ஸ்ரீ பகவானுவாச**
**நத்வேவாஹம் ஜாதுநாஸம் நத்வம்நேமே ஜனாதிபா:**
**நசைவந பவிஷ்யாம: ஸர்வேவய மத:பரம் (2-12)**

**ஸ்ரீ பகவான் சொன்னது**

நான் முன்பு ஒருபோதும் இல்லாமல் இருந்த தில்லை; நீயும் அவ்வாறே இல்லாமல் இருந்ததில்லை; இந்த மன்னர்களும் இல்லாமல் இருந்ததில்லை; இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமல் போவோம் என்பதும் இல்லவே இல்லை.

**தேஹினோ(அ)ஸ்மின் யதா தேஹே**
**கௌமாரம் யௌவனம் ஜரா**
**ததாதேஹாந்தர ப்ராப்திர் தீரஸ்தத்ர நமுஹ்யதி (2-13)**

உடலுள் உறையும் ஆன்மாவுக்கு இவ்வுடலில் குழந்தைப் பருவம், இளமை, மூப்பு எவ்விதமோ, அவ்விதமே வேறு உடலை அடைதலும் உண்டாகிறது. அதில் ஞானி மயங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாத்ரா ஸ்பர்சாஸ்து கௌந்தேய**
**சீதோஷ்ண ஸுக துக்கதா:**
**ஆகமா பாயினோ (அ)நித்யாஸ் தான்ஸ் திதிக்ஷஸ்வ பாரத**
**(2-14)**

குந்தி மகனே! பொறிகள் தத்தம் புலன்களுடன் கூடும்போது குளிர், வெப்பம், இன்பம், துன்பம் எனும் உணர்ச்சிகளைத் தருகின்றன; அவை தோன்றி அழிபவை; நிலையற்றவை; பரத குலத்துதித்தவனே; அவற்றைப் பொறுத்துக் கொள்.

**யம்ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப**
**ஸமது:க்க ஸுகம்தீரம் ஸோ(அ)ம்ருதத்வாய கல்பதே**
**(2-15)**

ஆண்மை மிகுந்தவனே, இவைகள் இன்ப துன்பங் களைச் சமமாய்க் கருதுபவனும், திட சித்தமுடையவனு மாகிய எந்த மனிதனை கலக்காவோ அவனன்றோ அழிவற்றதும் நிலையானதுமான வீடுபேற்றை அடைவதற்கு உரியவனாகிறான்.

**நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதேஸத:**
**உபயோரபி த்ருஷ்டோ(அ)ந்தஸ் த்வனயோஸ் தத்வ தர்சிபி:**
**(2-16)**

இல்லாத பொருளுக்கு இருப்பு கிடையாது. உள்ள பொருளுக்கு அழிவும் கிடையாது. இவ்விரண்டினுடைய முடிவான கருத்தை உண்மை உணர்ந்தவர்கள் அறிவார்கள்.

**அவிநாசி துதத்வித்தி யேநஸர்வ மிதம்ததம்**
**விநாச மவ்யயஸ் யாஸ்ய ந கச்சித்கர்த்து மர்ஹதி (2-17)**

இவ்வுலகெலாம் எதனால் நிறைந்துள்ளதோ அது அழிவற்றது என்று உறுதியாக உணர்வாய். இவ்வழிவற்ற பொருளை அழிக்க யாருக்கும் இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தவந்த இமேதேஹா நித்யஸ்யோக்தா சரீரிண:**
**அநாசிநோ (அ)ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ :பாரத**
**(2-18)**

என்றும் உளதாய், அழிவற்றதாய் உள்ள ஆன்மாவினுடைய இவ்வுடல்கள் அழிபவை என்று கூறப்படுகிறது.

**ய ஏனம் வேத்தி ஹந்தாரம் யச்சைனம் மன்யதே ஹதம்**
**உபௌதௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹன்யதே**
**(2-19)**

எவன் இந்த ஆன்மாவைக் கொல்பவனாக அறிகிறானோ, எவன் இதைக் கொல்லப்படுவதாக எண்ணுகிறானோ, அவ்விருவரும் உண்மை தெரிந்தவர்களல்லர். இவ்வான்மா கொல்வதில்லை, கொல்லப் படுவதில்லை.

**நஜாயதே ம்ரியதே வா கதாசிந்**
**நாயம் பூத்வா பவிதா வாநபூய:**
**அஜோநித்ய சாச்வதோ(அ)யம் புராணோ**
**ந ஹன்யதே ஹன்யமானே சரீரே (2-20)**

இவ்வான்மா ஒருபோதும் பிறப்பதும் இல்லை; இறப்பதும் இல்லை; இல்லாமலிருந்து மறுபடியும் உண்டாவதில்லை. பிறவாதது, என்றுமுள்ளது, இறவாதது, தேயாதது, பழமையானது, உடல் கொல்லப்பட்டாலும் இது கொல்லப்படுவதில்லை.

**வேதா (அ)விநாசினம் நித்யம் ய ஏன மஜமவ்யயம்**
**கதம்ஸ புருஷ: பார்த்த கம்காதயதி ஹந்திகம் (2-21)**

பார்த்தா! எவன் இவ்வான்மாவை அழிவற்றதாகவும், என்றுமுள்ளதாகவும், பிறப்பற்றதாகவும், மாறுதலற்றதாகவும், அறிகின்றானோ, அவன் எங்ஙனம் யாரைக் கொல்வான், யாரைக் கொல்விப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸாம்ஸி ஜீர்ணானி யதாவிஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோ(அ)பராணி
ததா சரீராணி விஹாய ஜீர்ணான் யன்யானி ஸம்யாதி
நவானி தேஹீ (2-22)

மனிதன் எவ்வாறு கந்தல் துணிகளை எறிந்துவிட்டு வேறு புதியனவற்றை எடுத்துக் கொள்கிறானோ அவ்வாறு உடலில் உறையும் ஆத்மா நைந்துபோன உடலங்களை நீத்து வேறு புதியனவற்றை அடைகின்றான்.

நைநஞ் சிந்தந்தி சஸ்த்ராணி நைநந்தஹதி பாவக:
நசைனங் க்லேதயந்த்யாபோ ந சோஷயதிமாருத:(2-23)

ஆயுதங்கள் இவ்வான்மாவை வெட்டமாட்டா; நெருப்பு இதை எரிக்காது; நீர் இதை நனைக்காது; காற்றும் உலர்த்தாது.

அச்சேத்யோ(அ)ய மதாஹ்யோ(அ)யம்
அக்லேத்யோ (அ)சோஷ்ய ஏவச
நித்ய: ஸர்வகத: ஸ்த்தாணுர
சலோ(அ)யம் ஸநாதன: (2-24)

இவ்வான்மா வெட்டொணாதது; எரிக்கொணாதது, நனைக்கொணாதது; உலர்த்தவும் ஒண்ணாதது; இது அழிவற்றது, எங்கும் நிறைந்தது, நிலைபெற்றது, அசைவற்றது, என்றுமுள்ளது.

அவ்யக்தோ(அ)ய மசிந்த்யோ(அ)யம்
அவிகார்யோ(அ)ய முச்யதே
தஸ்மா தேவம் விதித்வைநம் நானுசோசிது மர்ஹஸி
(2-25)

இது புலன்களுக்கு எட்டாதது, மனதுக்கெட்டாதது, மாற்ற முடியாதது எனச் சொல்லப்படுகிறது. ஆதலால் இங்ஙனம் அறிந்து வருந்துவதற்கு நீ உரியவனல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதசைனம் நித்யஜாதம் நித்யம்வா மன்யஸேம்ருதம்**
**ததாபித்வம் மஹாபாஹோ நைநம் சோசிதுமர்ஹஸி**
**(2-26)**

ஒருவேளை இதை எப்போதும் பிறப்பதாகவும், இறப்பதாகவும் நீ நினைத்தாய் எனினும், அப்போதும் பெருந்தோளுடையாய்! நீ இதைக்குறித்து வருந்துவது தகாது.

**ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யுர்**
**த்ருவம் ஜன்ம ம்ருதஸ்யச**
**தஸ்மா தபரிஹார்யே(அ)ர்த்தே**
**நத்வம் சோசிது மர்ஹஸி (2-27)**

பிறந்தவனுக்கு இறப்பு உறுதியன்றோ இறந்தவன் பிறப்பதும் உறுதி. ஆதலால் தவிர்க்க முடியாத காரியத்தில் நீ வருந்துவது தகாது.

**அவ்யக்தா தீனிபூதானி வ்யக்தமத்யானி பாரத**
**அவ்யக்த நிதனான்யேவ தத்ரகா பரிதேவனா(2-28)**

பார்த்தா! உயிர்கள் முதலில் தோன்றாமலும், இடையில் தோன்றியும், முடிவில் தோன்றாமலும் இருக்கின்றன. அதில் வருந்துதல் ஏன்?

**தேஹீநித்ய மவத்த்யோ(அ)யம்**
**தேஹேஸர்வஸ்ய பாரத**
**தஸ்மாத் ஸர்வாணி பூதானி**
**நத்வம் சோசிது மர்ஹஸி (2-30)**

பார்த்தா! எல்லா உடலிலும் உள்ள இந்த ஆன்மா என்றும் இறப்பதில்லை. ஆதலால் நீ எவ்வுயிர்களைப் பற்றியும் வருந்த வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பகவான் உவாச

பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ் தஸ்ய வித்யதே
நஹி கல்யாணக்ருத் கச்சித் துர்க்கதிம் தாத கச்சதி
(6-40)

ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னது

பார்த்தா! அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் அழிவு என்பது இல்லை. மகனே! நல்லதைச் செய்பவன் நிச்சயமாய் ஒருபோதும் இழிவை அடையவே மாட்டான்.

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகான் உஷித்வா சாச்வதீ ஸமா
சுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபி ஜாயதே
(6-41)

யோகத்திலிருந்து தவறியவன் புண்ணியம் செய்தவர்களுக்குரிய உலகங்களை அடைந்து பல்லாண்டுகள் வாழ்ந்து தூயோர்களும், செல்வந்தர்களும் ஆகியோரின் வீட்டில் மறுபடியும் பிறக்கிறான்.

அதவா யோகினா மேவ குலே பவதி தீமதாம்
ஏதத்தி துர்லபதரம் லோகேஜன்ம யதீத்ருசம் (6-42)

அல்லது ஞானவான்களான யோகிகளின் குலத்திலேயே பிறக்கின்றான். இது போன்ற பிறவி நிச்சயமாக உலகில் அடைதற்கு அரியதாகும்.

தத்ர தம் புத்தி ஸம்யோகம் லபதே பௌர்வ தேஹிகம்
யததேச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன (6-43)

குருகுலத் தோன்றலே! அங்கு முற்பிறப்பில் உண்டான யோக புத்தியை அடைகிறான்; மீண்டும் முக்தி லாபத்திற்காக முன்னைவிட அதிகம் முயல்கின்றான்.

அந்தகாலேச மாமேவ ஸ்மரன் முக்த்வா கலேபரம்
ய:ப்ரயாதி ஸமத்பாவம் யாதிநாஸ்த் யத்ரஸம்சய: (8-5)

கடைசிகாலத்திலும் என்னையே நினைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு உடம்பை விட்டு எவன் செல்லுகிறானோ, அவன் என் சொரூபத்தை அடைகிறான்; இதில் ஐயமில்லை.

**யம்யம்வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே கலேவரம்**
**தம்தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித: (8-6)**

குந்தியின் மைந்தா! கடைசியில் எந்தெந்த நினைவுடன் உடலை விடுகிறானோ, எப்போதும் அப்பொருளையே நினைத்தால் அவன் அதையே அடைகிறான்.

**தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்யச**
**மய்யர்ப்பித மனோபுத்திர் மாமேவைஷ்யஸ்ய ஸம்சய: (8-7)**

ஆகையால் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டே செயல்புரிவாயாக. மனத்தையும் புத்தியையும் எனக்கு அர்ப்பணம் செய்தால் சந்தேகமின்றி என்னையே வந்தடைவாய்.

**அப்யாஸ யோகயுக்தேன சேதஸா நான்யகாமினா**
**பரமம் புருஷம் திவ்யம் யாதிபார்த்தானு சிந்தயன் (8-8)**

பார்த்தா! இடைவிடாத யோகப்பயிற்சியால் நிலைபெற்றதும் வேறொன்றை நாடாததும் ஆகிய மனத்தால் தியானம் செய்து, ஒளிமயமான பரம புருஷனை ஒருவன் அடைகிறான்.

**கவிம் புராண மனுசாஸிதாரம்-**
**அணோரணீயாம்ஸ மனுஸ்மரேத்ய:**
**ஸர்வஸ்ய தாதார மசிந்த்ய ரூபம்-**
**ஆதித்ய வர்ணம் தமஸ:பரஸ்தாத் (8-9)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப்ரயாணகாலே மனஸாசலேன**
**பக்த்யா யுக்தோ யோகபலேன சைவ**
**ப்ருவோர் மத்யேப்ராண மாவேச்ய ஸம்யக்**
**ஸதம்பரம் புருஷ முபைதி திவ்யம் (8-10)**

எல்லாம் உணர்பவனும், எவர்க்கும் முந்தியவனும், எல்லாவற்றையும் ஆள்பவனும், அணுவிலும் சிறியவனும், எல்லார்க்கும் வினைப்பயனைத் தருபவனும், சிந்தித்தற்கு அரிய வடிவுடையவனும், சூரியனைப்போல ஸ்வயம் பிரகாசனும், அவித்தை இருளுக்கு அப்பாற்பட்டவனு மாகியவனை, பக்தியுடன் எவன் அசையாத மனத்தோடு யோக வலிமையால் புருவ மத்தியில் பிராணனைச் செவ்வையாக நிலைநிறுத்தித் தியானிக்கின்றானோ அவன் ஒளி மயமான அப்பரம புருஷனை அடைகிறான்.

**ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோஹ்ருதி நிருத்யச**
**மூர்த்ன்யாதா யாத்மன: ப்ராணம்**
**ஆஸ்த்திதோ யோகதாரணாம் (8-12)**

**ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன்**
**ய:ப்ரயாதி த்யஜன் தேஹம் ஸயாதி பரமாங்கதிம்**
**(8-13)**

எல்லாப் பொறிவாயில்களையும் அடைத்து மனத்தையும் இதயத்தில் நிலைநிறுத்தித் தனது பிராணனைத் தலையின் உச்சியில் ஒடுக்கி யோக தாரணையில் நிலைபெற்றவனாய், ஓம் என்னும் பிரம்ம வாசகமாகிய ஓரெழுத்தை உச்சரித்துக் கொண்டு, என்னைச் சிந்தித்தவனாய் யார் உடலைவிட்டுச் செல்கின்றானோ, அவன் உயர்கதியை அடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுபேத்ய புனர்ஜன்ம துக்காலய மசாச்வதம்
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாங்கதா:
(8-15)

சிறப்பான முக்தி லாபத்தைப் பெற்ற மகான்கள் என்னை வந்தடைந்து துன்பத்துக்கிருப்பிடமாகிய நிலையற்றதான மறுபிறப்பை அடைவதில்லை.

யதா ஸத்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத்
ததோத்தம் அவிதாம் லோகான் அமலான் ப்ரதிபத்யதே
(14-14)

எப்போது ஸத்வகுணம் ஓங்கியிருக்குமோ அப்போது ஜீவன் மரணமடைந்தால் உயர்ந்த ஞானிகளுக்குரிய தூய உலகங்களை அடைகிறான்.

ரஜஸி ப்ரலயங் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே
ததா ப்ரலீனஸ் தமஸி மூடயோநிஷு ஜாயதே (14-15)

ரஜோ குணத்தில் உயிர் நீத்தால் கருமப்பற்று உடையோரிடை பிறக்கின்றான். அவ்வாறே தமோ குணத்தில் உயிர்நீத்தால் பகுத்தறிவில்லாத கருக்களில் பிறக்கிறான்.

ஸஞ்ஜய உவாச
யத்ரயோகேஸ்வர: க்ருஷ்ணோ
யத்ர பார்த்தோ தனுர்த்தர:
தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர்
த்த்ருவா நீதிர் மதிர்மம(18-78)

ஸஞ்ஜயர் சொன்னது

யோகேஸ்வரனாகிய கிருஷ்ணன் எங்கே இருக்கின்றானோ, வில்லேந்திய அர்ச்சுனன் எங்கே இருக்கின்றானோ, அங்கேதான் மங்களமும், வெற்றியும், பெருக்கமும், நிலைத்த நீதியும் (இருக்கும்) என்பது என் கொள்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீதாமகாத்மியம்

(கீதையின் பெருமை)

**கீதாசாஸ்த்ர மிதம் புண்யம் ய: படேத் ப்ரயத: புமான்
விஷ்ணோ: பதமவாப்னோதி பய சோகாதி வர்ஜித: 1**

இந்தப் புண்ணியமான ஸ்ரீமத் பகவத்கீதையைக் கற்கும் மனிதன் அச்சமும், துயரமும் அற்ற விஷ்ணு பதவியை (தெய்வ நிலையை) அடைவான்.

**கீதாத்த்யயன சீலஸ்ய ப்ராணாயாம பரஸ்யச
நைவ ஸந்திஹி பாபானி பூர்வ ஜன்மக்ருதானிச 2**

கீதை கற்கும் வழக்கமுடையவனையும், ப்ராணாயாமம் செய்துவருபவனையும், முற்பிறவிகளில் செய்த பாவங்கள் பற்றா.

**மலநிர்மோசனம் பும்ஸாம் ஜலஸ்நானம் தினே தினே
ஸக்ருத் கீதாம்பஸி ஸ்நானம் ஸம்ஸார மலநாசனம்3**

நாடோறும் நீரில் மூழ்குவதால் ஒருவனது உடம்பின் அழுக்குகள் நீங்குவதுபோல, ஒருதடவையாவது கீதையாகிய தீர்த்தத்தில் மூழ்கினால் பிறப்பிறப்பாகின்ற கறை நீங்கும்.

### ஈசாவாச்ய உபநிஷதம்

**வாயுரனில மம்ருத மதேதம் பஸ்மாந்தகும் சரீரம்
ஓம் க்ரதோ ஸ்மர, க்ருதகும் ஸ்மர, க்ரதோ ஸ்மர,
க்ருதகும் ஸ்மர (17)**

மூச்சுக்காற்று அழிவில்லாத வாயுவை அடையட்டும். பிறகு இந்த உடல் சாம்பலாக முடியட்டும். ஓங்கார ஸ்வரூபியும், ஸங்கல்ப ஸ்வரூபியும், அக்கினி ஸ்வரூபியுமான பகவானே! இந்த ஆத்மாவை நினைப்பீர், இதனால் செய்யப் பட்டதை நினைப்பீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான் விச்வானி**
**தேவவயுனானி வித்வான்,**
**யுயோத் யஸ்மஜ்-ஜுஹுராண-மேனோ**
**பூயிஷ்டாந்தே நம உக்திம் விதேம.(18)**

அக்னியே! செயலால் உண்டான செல்வத்தை யனுபவிப்பதற்கு நல்ல மார்க்கத்தில் அழைத்து செல்வீர். தேவனே! எல்லா எண்ணங்களையும் நீர் அறிவீர். மறைந்திருந்து கெடுக்கும் பாவத்தை நாசம் செய்வீர். நமஸ்கார வசனங்களை வெகுவாய்ச் சமர்ப்பித்து உம்மைப் பூஜிக்கிறோம்.

பிரார்த்தனை

**ஓம் ஸர்வே பவந்து ஸுகின:**
**ஸர்வே ஸந்து நிராமயா:**
**ஸர்வே பத்ராணி பச்யந்து**
**மாகச்சித் துக்கபாக் பவேத்.**

எல்லோரும் சுகமாக வாழ்க. எல்லோரும் நோயின்றி வாழ்க. எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக. ஒருவரும் துன்புறுதல் கூடாது.

**ஓம் த்ரயம்பகம் யஜாமஹே**
**ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்**
**உர்வாருக மிவ பந்தநாத்**
**ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்**

மணம் நிறைந்தவராய், உயிர்கள் அனைத்தையும் நன்கு போஷிப்பிக்கும் முக்கண்ணனாகிய சிவபெருமானை நாம் வணங்குகிறோம். எவ்வாறு வெள்ளரிப்பழம் கொடியின் பந்தத்தினின்று விடுபடுகிறதோ அவ்வாறே அவர் மரணத்தினின்று விடுவித்து அழிவற்ற பதத்தை அருள்வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓம் அஸதோ மா ஸத்கமய**
**தமஸோ மா ஜ்யோதிர்கமய**
**ம்ருத்யோர்மா அம்ருதம்கமய**
**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:**

பொய்யினின்று மெய்மைக்கு இட்டுச் செல்வாயாக. அஞ்ஞான இருளிலிருந்து ஞானஜோதியின்கண் எடுத்துச் செல்வாயாக. மரணத்தை விட்டு மரணமில்லாப் பெருவாழ்விற்கு அழைத்துச்செல்வாயாக.

எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல, எல்லாம் அறியும் இறைவனே, கருவுற்ற நாள் முதல் காத்து, உணவும், காற்றும், நீரும், உடலும், உள்ளமும் அருளி அனைவருக்கும் அருள்பாலிக்கும் நீ இந்தக் குடும்பத்தைப் பிரிந்து சென்றுள்ள (திரு.........) அவர்களின் ஆத்மா நிலையான சாந்தி பெற்று நற்கதியடைய அருள்பாலிக்க உன்தாள் பணிந்து பிரார்த்திக்கிறோம்.

மேலும் இவர்தம் பிரிவால் வாடும் குடும்பமும், உற்றாரும், நண்பரும் மனஅமைதிபெற வல்லமை அளிப்பாயாக.

அனைவரும் மன அமைதி பெற்று வாழ அருள் பாலிப்பாயாக.

**மங்களம் ஸர்வலோகாய விவேகானந்த தாயினே**
**சாரதா ப்ராண நாதாய ஸ்ரீ ராமக்ருஷ்ணாய மங்களம்.**

**ஓம் பூர்ணமத பூர்ணமிதம்**
**பூர்ணாத் பூர்ண முதச்யதே**
**பூர்ணஸ்ய பூர்ண மாதாய**
**பூர்ணமேவா வஸிஷ்யதே**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

2 நிமிடம் தியானம், நிறைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | ஹிந்து சமயம் -தொடக்கநிலை | 20.00 |
| 2. | ஹிந்து சமயம் -இளநிலை | 25.00 |
| 3. | ஹிந்து சமயம் -வளர்நிலை | 25.00 |
| 4. | ஹிந்து சமயம் -உயர்நிலை | 25.00 |
| 5. | ஹிந்து சமயம் -முதுநிலை | 35.00 |
| 6. | ஸ்ரீமத் பகவத்கீதை- பாட்டும் உரையும் | 25.00 |
| 7. | தெய்வ, தேசபக்தி பஜனைப்பாடல்கள் | 15.00 |
| 8. | நல்ல நாடகங்கள் | 12.00 |
| 9. | கீதை கருத்துரை | 10.00 |
| 10. | பாரதி பக்திப்பாடல்கள் | 08.00 |
| 11. | இராகுகால துர்கா வழிபாடு | 08.00 |
| 12. | ஸ்ரீமத்அம்பானந்தசுவாமிகள் வரலாறு | 06.00 |
| 13. | ஐயப்பன் பஜனைப் பாடல்கள் | 06.00 |
| 14. | கந்தபுராணம் - சுருக்கம் | 12.00 |
| 15. | வினாயகர் அகவல்,சிவபுராணம்,சஷ்டிகவசம் | 04.00 |
| 16. | தியாகியர் படை வேண்டும் | 07.00 |
| 17. | எளிய பூஜைமுறை | 07.00 |
| 18. | ஸ்ரீ ஸ்ரீ கௌரிமாதா | 03.00 |
| 19. | ஆத்மசாந்தி பிரார்த்தனை | 04.00 |
| 20. | மங்களப் பிரார்த்தனை | 03.00 |
| 21. | திருவிளக்கு பூஜை | 03.00 |
| 22. | ஹிந்து குடும்ப ஆசாரங்கள் | 03.00 |
| 23. | சுவாமி மதுரானந்தர்-வாழ்க்கை வரலாறு | 03.00 |
| 24. | நடராஜப்பத்து, கருடப்பத்து | 02.00 |
| 25. | திருப்பாவை, திருவெம்பாவை | 05.00 |
| 26. | ஹிந்து தர்மம் (மலையாளம்) | 20.00 |
| 27. | தீபபூஜா ,, | 02.00 |
| 28. | அம்பானந்த கீதாவலி ,, | 01.00 |
| 29. | ஹிந்து மத ஸாரம் ,, | 15.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்கள் தோறும் : சமயவகுப்பு
ஊர்கள் தோறும் : திருவிளக்கு பூஜை
ஊர்கள் தோறும் : ஸத் சங்கம்



பாரத நாட்டில் சோஷலிஸ, அரசியல் கருத்துக் களைப் பரப்புமுன் ஆன்மீகக் கருத்துக் களின் வெள்ளம் இங்கே பெருக் கெடுத்தோடச் செய்யுங் கள். நம் உபநிடதங் களிலும், மத நூல்களிலும், புராணங்களிலும் பொதிந்து கிடக்கிற அற்புதமான கருத்துக்களை வெளிக் கொணர்ந்து நாடு முழுவதும் வாரி இறைக்க வேண்டும். -சுவாமி விவேகானந்தர்


# வேதமுரசு

(ஆன்மீக மாத இதழ்)

இந்து சமயப் பண்பாட்டினை உணர்த்துகிறது
இந்து சமய ஞானத்தைப் புகட்டுகிறது
தேச பக்தியை வளர்க்கிறது
அறிவு வளர்ச்சிக்கும் - ஆன்மீக வாழ்விற்கும்
இணையற்ற வழிகாட்டி

இன்றே சந்தாதாரராவீர்

ஆண்டு சந்தா ரூ. 50 ஆயுட் சந்தா ரூ. 500

வெளியிடுவோர் போன் - 04651 - 537411

ஹிந்து தர்ம வித்யாபீடம்,
வெள்ளிமலை, கல்படி-அஞ்சல்.
கன்யாகுமரி - மாவட்டம் - 629204.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org